[1981 மார்ச் 7

உளுந்தூர்பேட்டை மருத்துவமனை.

*வினா எண். 426.—திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் பல நவீன வசதிகளுடன் விரிவு படுத்தவும் அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்சமயம் உளுந்தூர்ப் பேட்டை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஏற்கனவே இருக்கும் வசதிகளுடன் ஒரு இரத்தசேமிப்பு வங்கி ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் போன்ற ஆஸ் பத்திரிகளில் எக்ஸ்ரே போன்ற கருவிகள் நல்ல நிலையில் இல்லாத தால் சென்ற மாதம் 15 ஆம் தேதி வாக்கில் குளித்தலையிலிருந்து வந்த வக்கீல் குடும்பம் ஆபத்துக்குள்ளாகி அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கே எக்ஸ்ரே கருவிகள் இல்லாததால் எக்ஸ்ரே எடுக்கமுடியாமல் மயக்கம் கொடுத்து தையல் போடாமல் தையல் போட்டதால் கஷ்டப்பட்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள். இதுபோன்று ஏற்படாதவாறு இருக்கின்ற வகையில் உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் போன்ற ஆஸ்பத்திரிகளிலே எக்ஸ்ரே போன்ற கருவிகளை வைக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அந்த மருத்துவ மனை லோக்கல்பண்ட் டிஸ்பென்சரியாக இயங்கி வந்தது. 1-4-61 இல் அது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்போது 16 படுக்கைகள்தான் இருந்தன. பிறகு 24 படுக்கைகள் கொண்ட அதோடு அடிஷனல் வார்டு கொண்டதாக இருந்தது. இப்போது அதில் building accommodation for 40 beds, out-patient block, casualty room, labour room, *postmortem* shed, kitchen, pucca operation theatre, patients' waiting hall, preparation room for patients, separate room for washing என்றெல்லாம் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 4 அஸிஸ்டென்ட் சர்ஜன்ஸ், அஸிஸ்டென்ட் மெடிக்கல் ஆபீசர் (சித்தா) எல்லாம் நியமிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.